DEPOSITION OF WITNESS

-----

IN THE COURT OF PRINCIPAL JUDGE, CHENNAI

**CC.09/2023 - PW4**

Name : Mr.K.Manivannan

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 04th day of October, 2024.

---

எதிரி ஆஜர்.

**குறுக்கு விசாரணை** :- அமலாக்கத்துறையால் பதிவு செய்யப்பட்ட ECIR எண் 21/2021 பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஆவணங்கள் மூலம் எதுவும் தெரியாது. அமலாகத்துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் யார் யார் குற்றவாளிகள் என்பது அலுவலக ரீதியாக எனக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை. நான் வழங்கிய அறிக்கை எண்கள் CF 38/2020, 63/2020, 29/2020, 27/2021 என்றால் சரிதான். நான் வழங்கிய மேற்சொன்ன அறிக்கைகள் குற்ற பத்திரிக்கையில் உபயோகப்படுத்தப்பட்டனவா என்பது எனக்கு தெரியாது என்றால் முதல் விசாரணையின் போது எனக்கு தெரிய வந்தது. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் எந்த சாராம்சத்தில் இவ்வழக்கில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அறிக்கை எண்கள் CF 38/2020 இவ்வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அறிக்கை எண்கள் CF 63/2020 இவ்வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அரசு சான்றாவணம் 14 CF 29/2020 அறிக்கை வழங்கப்பட்டதற்கான முகப்பு கடிதம் ஆகும். அறிக்கை எண்கள் CF 38/2020 மற்றும் CF 63/2020 ஆகியவை எந்த இடத்திலும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

CF 38/2020 அறிக்கையில் எந்த உபகரணம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தேன் என்பது எனக்கு ஞாபகமுள்ளதா என்றால் ஞாபகமுள்ளது, அதை என்னால் கூற முடியும். CF 29/2020 அறிக்கையில் மொத்தம் 16 மாதிரிகள் எனது ஆய்விற்காக அனுப்பப்பட்டன. வழக்கின் தேவைக்காக ஒரு 5 மாதிரிகளின் அறிக்கை தனியாகவும், மீதமுள்ள 11 மாதிரிகளின் அறிக்கை தனியாகவும், மேற்சொன்ன CF 38/2020 மற்றும் CF 63/2020 ஆகிய அறிக்கைகளாக வழங்கப்பட்டன. CF 38/2020 அறிக்கையில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு SEAGATE Hard Disk ( Back up plus and S/N :– NABDBVHA ) புதியது மாதிரி 1 ஆக குறியீடப்பட்டு CF 29/2020 அறிக்கையில் குறியிடப்பட்ட மாதிரிகள் 1 முதல் 5 வரை உள்ள Device களில் இருந்து நகல் எடுக்கப்பட்ட கோப்புகள் இந்த புதிய Hard Disk ல் வழங்கப்பட்டது. ( சாட்சி CF 38/2020 அறிக்கையில் அலுவலக நகல் தன் கைவசம் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக எடுத்து வந்துள்ளதை பார்த்து சாட்சியம் அளித்தார். இந்நிலையில் அரசு தரப்பு வழக்குறைஞர் சாட்சி மேற்படி அறிக்கையை பார்த்து சாட்சியம் அளித்ததால் மேற்படி அறிக்கையை இந்த வழக்கில் குறியீடு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்தார், அதற்கு எதிர் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது, எனவே அந்த அறிக்கையின் அலுவலக நகல் **<u>அரசு தரப்பு சான்றாவணம் 24 ( 2 தாள்கள்)</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது ). எனது அறிக்கை CF 29/2020 ல் வழங்கப்பட்ட ஆய்விற்கான 16 மாதிரிகளில் மேலே கூறப்பட்ட SEAGATE Hard Disk வழக்காவணமாக இல்லை என்றால் சரிதான். அது புதிதாக இந்த வழக்கிற்காக வழங்கப்பட்டதாகும். CF 63/2020 அறிக்கையை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என் வசம் கோப்பில் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த அறிக்கை **<u>அரசு</u>**

__தரப்பு சான்றாவணம் 25 ( 2 தாள்கள்)__ ஆக குறியீடு செய்யப்படுகிறது. CF 63/2020 அறிக்கை நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட External Hard Disk SEAGATE S/N :– NAA9JMN7 சம்பந்தப்பட்ட அறிக்கை ஆகும். அந்த SEAGATE Hard Disk வழக்கு ஆவணம் அல்ல. புதிதாக வழங்கப்பட்ட Hard Disk ஆகும். அதில் மீதமுள்ள மாதிரிகள் 6 லிருந்து 15 வரை உள்ள Device களில் இருந்து நகல் எடுக்கப்பட்ட கோப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

( இந்நிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |